# அல் ஆரிபுபில்லாஹ்

# ஹழ்ரத் காஜி ஹாபிழ் முஹம்மது கியாதுத்தீன் வலியுல்லாஹ் IV (ரஹ்)

( மறைவு : ஹிஜ்ரி 1345 ஷவ்வால் பிறை 16 ) அடக்கத்தலம் : மாதம்பை

ஹழ்ரத் காஜி ஹாபிழ் முஹம்மது கியாதுத்தீன் வலியுல்லாஹ் IV (ரஹ்) அவர்கள் தமது தந்தையார் ஆற்காடு நாவாபின் அங்கீக்கரிக்கப்பட்ட பிரதிநிதியாக, தென்கிழக்கு பிராந்தியத்தின் காஜியாக விளங்கிய காஜி ஷெய்க் அப்துல்லாஹ் III (ரஹ்) அவர்கள் மறைவுக்குப்பின் கீழக்கரை நகரின் 8வது காஜியாராக ,கீழக்கரை- நடுத்தெரு ஜும்ஆ மஸ்ஜிதின் 4 வது மஹல்லி - முத்தவல்லியாக , ஜும்ஆ மஸ்ஜிதின் இமாமாக சேவையாற்றினார்கள் .

சன்மார்க்க அற-நெறி போதனைகளை செய்து வந்த இவர்கள் ஜும்ஆ மஸ்ஜித் மத்ரஸாவில் மாணவர்களுக்கு மார்க்க கல்வி புகட்டினார்கள். ஷா:.பி மத்ஹபின் சட்ட நூல் எழுதியிருந்தார்கள் இவர்களின் மாணவர்களில் பலர் சிறந்த மாக்க மேதைகளாக விளங்கினர்.

வல்ல அல்லாஹ்வை துதி - திக்ர் செய்து இறையன்பைப் பெறக்கூடியதுமான ,மனஅமைதியை ஏற்படுத்தும் ராத்திபுமாகிய “ராத்திபதுல் கியாதிய்யா”வை தொகுத்தளித்த இறைநேசச்செல்வர் ஆவார். “ராத்திபதுல் கியாதிய்யா”வை அரபுத்தமிழில் மொழிப்பெயர்த்து வலியுல்லாஹ் அவர்களின் பேரர் ஹழ்ரத் மஹானந்தபாபா முஹம்மது முஹம்மத் அப்துல் காதிர் வலியுல்லாஹ் அவர்கள் விரிவான நூல் எழுதியுள்ளார்கள். இவர்களின் நூற்க்கள் காஜியார் நூலகத்தில் இடம்பெற்றுள்ளது

அல்லாஹ்வைப் புகழ்ந்தும் அண்ணல் நபி (ஸல்) அவர்களை வாழ்த்தியும் ஷுஹதாக்கள் இறை நேசச்செல்வர்கள் மீதும் பல அருமையான கஸீதாக்களை இயற்றியுள்ளார்கள். அவர்கள் காலத்தில் காதிரிய்யா தரீக்காவின் ஷைய்குவாக விளங்கிய ஷேக் அலி அல் ஜபரத்தி அவர்களின் கலீபாவாக விளங்கினார்கள்

இவர்களின் மறைவின் பொழுது அக்காலத்தில் தமிழகத்தில் சிறப்புடன் விளங்கிய பல உலமா பெருமக்கள் பலர் இவர்கள் மீது மர்தியாக்கள் இயற்றியுள்ளார்கள் வலியுல்லாஹ் அவர்கள் மீது மவ்லவி முகம்மது ஸதக்கத்துல்லாஹ் ஆலிம் (ரஹ்) அவர்கள்

المَواهِبُ العليِّ المَتين فِى مَنَاقِب الوليِّ قاضي مُحَمَّدُ غِياث الدين الكركريّ என்ற மவ்லிது இயற்றியுள்ளர்கள்

வலியுல்லாஹ் அவர்களின் பேரரின் புதல்வர் காஜி மவ்லவி முஹம்மது இப்ராஹீம் பாஜில் நூரிய்யி (ரஹ்) அவர்கள் قاضي مُحَمَّدُ شَيخُنَا ذِى الولايَةِ என முடியும் வலியுல்லாஹ் அவர்கள் மீது பைத் இயற்றியுள்ளர்கள் செய்தார்கள்

தமது தந்தையார் ஹழ்ரத் காஜி ஷெய்க் அப்துல்லாஹ் (ரஹ்) அவர்கள் மீது اَلْحَمْدُ لِخَلاَّ أُناسِ لَتُقَاهُ என தொடங்கும் பைத்தை வலியுல்லாஹ் அவர்கள் இயற்றியுள்ளர்கள் செய்தார்கள்.

இக்காஜி அவர்களின் மாமனார் ஹழ்ரத் *சீனி* முஹம்மது லெப்பை ஆலிம் (ரஹ்)அவர்கள். இப்பெரியாரின் இப்பெரியார் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மீது அழகிய மவ்லிது ஷரீப் இயற்றியவர்கள், இவர்களின் அடக்கத்தலம் பழைய குத்பா பள்ளி - மீன் கடைகளின் வடபுறம் உள்ளது , இப்பெரியாரின் மாமா ஹழ்ரத் அபூபக்கர் லெப்பை ஆலிம் (ரஹ்) அவர்கள்இவர்களின் அடக்கத்தலம் ஹமீதியா ஆண்கள் மேனிலைப்பள்ளி சாலையில் ஷேக் அப்பா அவர்கள் அடக்கத்தலம் அருகில் உள்ளது . வல்ல அல்லாஹ் இவர்களின் கப்ரை பிரகாசமாக்கி அருள்பாலிப்பானாக.

Courtesy : www.kilakaraikazi.com